28.03.2026 O.S. 154/2015 வா.சா 1 மணிகண்டன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி

இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு 7,11 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது அந்த எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய். இந்த வழக்கிற்கு சம்பந்தப்பட்டாதவை.

3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

3,4 பிரதிவாதிகள் எனது பங்காளிகள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் செல்வன் என்பவரின் மகன்கள் என்றால் சரிதான். வழக்கு 1வது அட்டவணையில் 1வது லக்க சொத்து 1வது வாதியின் தந்தை வழிதாத்தாவும், 1ம் பிரதிவாதியின் தந்தையுமான சுப்பிரமணியன் என்பவருக்கு 4.2.1940ம் ஆண்டு கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்கு 1வது அட்டவணை 2,3,4 லக்க சொத்துக்கள் மேற்படி சுப்பிரமணியன் என்பவருக்கு பூர்வீகமாய் பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி சுப்பிரமணியன் வழக்கு 1வது அட்டவணை 2,3,4 லக்க சொத்துக்களை அவர் ஆயுள் உள்ளவரை அனுபவம் செய்து வர வேண்டியது என்றும் 16.3.1961ம் தேதிய வழக்கு 1ம் அட்டவணை 1லக்க சொத்தை பொறுத்துமேற்படிசுப்பிரமணயின் அவரது குமாரர்களான பார்வதி செட்டியார், முத்துசாமி, தனது மகள் கல்யாணியம்மாள் ஆகியோர்களுக்கு ஆதரவாக ஒரு ஏற்பாடு ஆவணம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவண ஷரத்துபடி மேற்படி 3 நபர்களும் வில்லங்கம் எதுவும் செய்யாமல் ஆயுள் வரை அனுபவம் செய்து வர வேண்டும் என்றும், ஆயுளுக்கு பின் பார்வதி, முத்துசாமி இருவரும் அனுபவம் செய்து வர வேண்டும் என ஷரத்துக்கள் சொல்லப்பட்டுள்ளது

என்றால் சரிதான். முத்துசாமி இறந்த பிறகு மேற்படியாரின் மனைவியான ஆறுமுகத்தம்மாள் என்பவரிடம் இருந்து பார்ரவதி செட்டியாரும், பார்வதி செட்டியாரின் குமாரரான 2ம் பிரதிவாதி சுப்பிரமணியன், 1ம்வாதி லட்சுமணன், 3,4 பிரதிவாதிகளின் தந்தையான செல்வம் ஆகிய 4 நபர்களும் தங்களுக்குரிய 1/3 பங்கை பாகவிடுதலை எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகபாத்திய விடுதலை ஆவணத்தின்படியும், 1961ம் வருடத்திய ஏற்பாடு ஆவணத்தின்படியும் வழக்கு 1ம் அட்டவணை 1லக்க சொத்தான 1 ஏக்கர் 24 செண்ட் நிலம் பார்வதி செட்டியாருக்கும், அவரது குமாரர்களான லட்சுமணன், சுப்பிரமணியன், செல்வம் ஆகிய 4 நபர்களுக்கும் கூட்டாக 2/3 பங்கு பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி கல்யாணியம்மாளுக்கு வழக்கு 1ம் அட்டவணை 1ம் லக்க சொத்தில் தனக்குரிய பிரிவின்றி 1/3 பாகத்தை தனது மகன் வழி பேரன்களான லட்சுமணன், சுப்பிரமணியன், செல்வம் ஆகியோர்களுக்கு கடந்த 17.3.1964ம் ஆண்டு செட்டில்மெண்ட் மூலம் எழுதி பாத்தியம் கொடுத்துள்ளார் என்றால்சரிதான். மேற்படி விபரம் படி வழக்கு 1வது அட்டவணை 1ம்லக்க சொத்தில் பார்வதி செட்டியாருக்கு 1/3 பங்கும், அவரது குமாரர்களான லெட்சுமணன், சுப்பிரமணியன், செல்வம் ஆகியோர்களுக்கு கூட்டாக 2/3 பாகமும் பாத்தியம் என்றால் சரிதான். வழக்கு 1ம் அட்டவணை 2 முதல் 4 லக்க சொத்துக்கள் லெட்சுமணன், சுப்பிரமணியன், செல்வம் ஆகியோர்களுக்கு கூட்டாக அனுபவம் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் அட்டவணை 2 முதல் 4 லக்க சொத்து சீனிசெட்டியார் மகனான சுப்பிரமணியன் என்பவருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சுப்பிரமணியன் அந்த சொத்துக்களைஅனுபவம் செய்து வந்து எவ்வித ஆவணமும் எழுதி

வைக்காமல் இறந்து விட்டார் என்றால் சரிதான். 1வது அட்டவணை 1வது லக்க சொத்தில் பார்வதி செட்டியாருக்கு 1/3 பாகம் பிரிவின்றி இருந்தது என்றால் சரிதான். 1/3 பாகம் என்பது 41 செண்டு என்றால் சரிதான். பார்வதி செட்டியார் தனது குமாரரான சுப்பிரமணியன் செட்டியாருக்கு 90 செண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அவரது பெண் மக்களான வள்ளியம்மாள், மாரியம்மாள், கல்யாணி ஆகியோர்களுக்கு தலா 5 செண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு எழுதி வைக்க சுப்பிரமணியனுக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். 1வது அட்டவணையில் 2வது லக்க சொத்து 37 செண்டு உள்ளது என்றால் சரிதான். அதை பார்வதி செட்டியார், 5ம் பிரதிவாதியான வேல்சாமி என்பவருக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு எழுதி வைப்பதற்கு பார்வதி செட்டியாருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான். பார்வதிசெட்டியார், மேற்படி பார்வதி செட்டியார் குமாரர்களான லெட்சுமணன், சுப்பிரமணியன், செல்வம் ஆகியோர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 1/4 பாகம் பாத்தியம் என்றால் சரிதான். 1வது அட்டவணை 2,3,4 சொத்துக்கள் வாதி வகையாவிற்கு 1/3 பாகமும், 2ம் பிரதிவாதிக்கு 1/3 பாகமும், 3,4 பிரதிவாதிகளுக்கு கூட்டாக 1/3 பாகமும் பாத்தியம் என்றால் சரிதான். நாங்கள் 1/4 பாகம் கேட்டு தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். 3,4 பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்துக்களில் கூட்டாக 1/3 பாகம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதன்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரிதான்.

28,29 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

28,29 பிரதிவாதிகள் சரியான மறுபயன் அடிப்படையில் சொத்துக்களை கிரயம் வாங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. 28,29

பிரதிவாதிகள் நல்லெண்ணத்தின் கிரையம்பெற்ற நபர்கள் என்றால் சரியல்ல. நான் தேவையில்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் கோரிய பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. (3,4 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணையை 28,29 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது)

7,11,19,21 முதல் 27 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

இறந்து போன வாதி லட்சுமணன் என் அப்பா ஆவார். 1ம் பிரதிவாதி பார்வதி செட்டியார் எனது தாத்தா ஆவார். பார்வதி செட்டியாருக்கு 3 மகன்கள். 1ம் பிரதிவாதிக்கு 2ம் பிரதிவாதி சுப்பிரமணியன் மகன் ஆவார். 3,4 பிரதிவாதிகளின் தகப்பனார் செல்வம் ஒரு மகன் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் பார்வதி செட்டியாரின் பூர்வீக சொத்துக்களாகும். வழக்கு சொத்துக்களை பொறுத்து வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் வில்லங்கம் எடுத்து பார்த்தேனா என்றால் எனது அப்பாவிற்கு தான் தெரியும். எனக்கு தெரியாது. வழக்கின் விபரம் எனக்கு ஓரளவிற்கு தெரியும். 1வது அட்டவணையில் 4வது லக்க சொத்து ஒரு வீடு என்றால் சரிதான். அந்த வீடு எங்களுடைய அனுபவத்தில் உள்ளது. 1வது அட்டவணையில் 1வது லக்க சொத்து 1 ஏக்கர் 24 செண்டு யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் அது பூர்வீக சொத்தாகும். சுப்பிரமணியன் செட்டியார் என் தாத்தாவின் அப்பா ஆவார். அவருடைய சொத்தாகும். அந்த சொத்தை பொறுத்து 1961ம் ஆண்டில் என் தாத்தா பார்வதி செட்டியார் பெயருக்கு சுப்பிரமணியன் செட்டியார் ஒரு நன்கொடை ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதை அனுசரித்து தான் என் தாத்தா

பார்வதி செட்டியார் 2ம் பிரதிவாதிக்கு 90 செண்டு நன்கொடையாக கொடுத்துள்ளார் என்றால் கொடுக்கப்பட்டுள்ளது. அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. எதிர்வழக்குரையில் சுப்பிரமணியனுக்கு 90 செண்ட் நன்கொடையாக கொடுக்கப்பட்டுள்ளதா சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 90 செண்ட் இடத்தை 2ம் பிரதிவாதி சுப்பிரமணியனுக்கு பார்வதி செட்டியார் நன்கொடை ஆவணம் மூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த 90 செண்டை கழிக்காமல் தான் 1 ஏக்கர் 24 செண்ட் என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் பிரிக்கவில்லை. பொதுவில் உள்ளது. மீதமுள்ள 34 செண்டையும் இதுநாள் வரை பிரிக்கவில்லை என்றால் எந்த சொத்தையும் பிரிக்கவில்லை. மீதமுள்ள 34 செண்டில் தான் பாகம் கோர உரிமையுண்டு என்றால் சரியல்ல. என் தாத்தாவிற்கு சொத்தை நன்கொடையாக கொடுப்பதற்கு உரிமையில்லை. நான் 1961ம் ஆண்டு நன்கொடை ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. 1961ம் ஆண்டு நன்கொடை ஆவணம் மூலமாக சொத்து என் தாத்தாவிற்கு கிடைத்தால் அவர் தனது மகன் 2ம் பிரதிவாதிக்கு நன்கொடை கொடுப்பதற்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. இந்த விபரம் தெரிந்து கொண்டு 1வது அட்டவணையில் 1வது லக்க சொத்து 1 ஏக்கர் 24 செண்டு என காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. 1வது அட்டவணையில் 2வது லக்க சொத்தான 2 ஏக்கர் 74 செண்ட் எனது பூட்டனர் சுப்பிரமணியன் என்பவருக்கு பாத்தியப்பட்டதாகும். அதன் மொத்த பரப்பு 2 ஏக்கா 74 செண்ட் என்றால் சரிதான். வழக்குரையில் 1 ஏக்கர் 37 செண்டு மட்டும் தான் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 ஏக்கர் 74 செண்டில் அனைவருக்கும் பாகம் உள்ளது. 1வது அட்டவணை 3வது லக்க சொத்தானது புல எண். 65/2பி–ல் 1 ஏக்கர் 39 செண்டில் வடபக்கம்

60 செண்டு என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 50 செண்ட் இடத்தை எனது தாத்தா 1ம் பிரதிவாதி 5 ம்பிரதிவாதி வேல்சாமி என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்த கிரைய ஆவணத்தின் நகலை நான் எடுத்து பார்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை பொறுத்து என் தாத்தா பார்வதி செட்டியார் உயிருடன் இருந்த போது தனது பெண் வாரிசுகளுக்கு தலா 5 செண்ட் இடத்தை 3 நபர்களுக்கும் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் பெரியப்பா சுப்பிரமணியன் அவரது மனைவி குருவம்மாளுக்கு சில சொத்துக்களை நன்கொடை மூலம் கொடுத்துள்ளார் என்றால் குருவம்மாள் அவரது மனைவி இல்லை. என் பெரியப்பா சுப்பிரமணியன் கணக்க பிள்ளைவலசையில் வசித்து வந்தார் என்றால் இல்லை. புளியங்குடியில் வசித்து வந்தார். எனக்கு 40 வயதாகிறது. நான் என் சொந்த ஊருக்கு வந்து 20 வருடம் ஆகிறது. நான் வந்த காலத்தில்என் பெரியப்பா புளியங்குடியில் தான் வசித்து வந்தார். அப்போது என் பெரியப்பாவுடன் நல்லஉறவு இருந்தது என்றால் எங்கள் அப்பாவுடன் போனில் பேசுவார். எங்களுடன் பேசியது இல்லை. குருவம்மாளும், சுப்பிரமணியனும் ஒன்றாக தான் வாழ்ந்து வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. புளியங்குடியில் இருந்து கணக்கபிள்ளைவலசைக்கு வந்து 10 வருடங்கள் இருக்குமா என்றால் இருக்கும். 1 வது அட்டவணை 4 வது லக்க சொத்தான வீட்டில் குடியிருந்தார்களா அல்லது தனியாக வாழ்ந்து வந்தார்களா என்றால் குருவம்மாளும், சுப்பிரமணியனும் தனியாக வாழ்ந்து வந்தார்கள். சுப்பிரமணியன் கணக்கபிள்ளைவலசையில் வைத்து விபத்து ஏற்பட்டு இறந்து விட்டார். சுப்பிரமணியனை திருநெல்வேலி ஹகிரவுண்ட் மருத்துவமனையில் வைத்து இருந்தார்கள். சுப்பிரமணியன் இறக்கும்

காலத்தில் குருவம்மாள் ஒன்றாக தான் வாழ்ந்தார் என்றால் சரிதான். குருவம்மாள் 2ம் பிரதிவாதியின் சட்டபூர்வமான வாரிசு என்றால் எனக்கு தெரியாது. சொத்துக்களை பல நபர்களுக்கு 2ம் பிரதிவாதி விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். வாங்கியவர்கள் காலிமனையாக வைத்து கட்டிடம் கட்டாமல் வைத்து அனுபவம் செய்து வருகிறார்கள். வழக்கு சொத்து தனித்த அனுபவத்திலும், கூட்டு அனுபவத்திலும் இல்லை என்றால் சரியல்ல. எங்கள் அனுபவத்தில் தான் உள்ளது. நான் கோரியபடி பாகம் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி (முழு பொ)
தென்காசி.